செய்தி வெளியீடு எண் : 1153 நாள் : 06.08.2024

# மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களால் அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை அரசாணை 07.08.2024 அன்று வழங்கப்படவுள்ளது.

தமிழ்நாடு அரசு தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக, அகவை முதிர்ந்த தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை வழங்கும் திட்டத்தினை 1978ஆம் ஆண்டில் தோற்றுவித்து, கடந்த 45 ஆண்டுகளாக பல்வேறு படிநிலைகளில் உதவித்தொகை, மருத்துவப்படி மற்றும் உதவித்தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு, தற்போது ஆண்டுதோறும் அகவை முதிர்ந்த 100 தமிழறிஞர்கள் தெரிவு செய்யப்பெற்று அவர்களுக்கு திங்கள்தோறும் ரூ.3,500/- உதவித் தொகையுடன் ரூ.500/- மருத்துவப்படி வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வகையில், 2022-2023ஆம் ஆண்டிற்கு தெரிவுசெய்யபப்பட்ட அகவை முதிர்ந்த 100 தமிழறிஞர்களுக்கு உதவித்தொகை பெறுவதற்கான அரசாணைகளை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களின் திருக்கரங்களால் 07.08.2024 புதன்கிழமை அன்று காலை 11.00 மணிக்கு சென்னைப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள 'தந்தை பெரியார் (எஃப்-50) கூட்ட அரங்கத்தில்' வழங்கப்படவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் 100 பேரில் சென்னை மாவட்டத்தில் 7 பேரும், திருவள்ளூர் மாவட்டத்தில் 3 பேரும், காஞ்சிபுரம் மாவட்டத்தில் 3 பேரும், வேலூர் மாவட்டத்தில் 2 பேரும், திருவண்ணாமலை மாவட்டதில் 3 பேரும், விழுப்புரம் மாவட்டத்தில் 2 பேரும், கடலூர் மாவட்டத்தில் 5 பேரும், பெரம்பலூர் மாவட்டத்தில் 1 நபரும், அரியலூர் மாவட்டத்தில் 2 பேரும், சேலம் மாவட்டத்தில் 7 பேரும், தருமபுரி மாவட்டத்தில் 3 பேரும், நாமக்கல் மாவட்டத்தில் 1 நபரும், ஈரோடு மாவட்டத்தில் 1 நபரும், கருர் மாவட்டத்தில் 2 பேரும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் 9 பேரும், திருப்பூர் மாவட்டத்தில் 2 பேரும், நீலகிரி மாவட்டத்தில் 1 நபரும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1 நபரும், புதுக்கோட்டை மாவட்டத்தில் 4 பேரும், சிவகங்கை

மாவட்டத்தில் 1 நபரும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 5 பேரும், திருவாரூர் மாவட்டத்தில் 2 பேரும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் 2 பேரும், மதுரை மாவட்டத்தில் 4 பேரும், திண்டுக்கல் மாவட்டத்தில் 2 பேரும், தேனி மாவட்டத்தில் 6 பேரும், விருதுநகர் மாவட்டத்தில் 3 பேரும், தூத்துக்குடி மாவட்டத்தில் 2 பேரும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 1 நபரும், திருப்பத்தூர் மாவட்டத்தில் 1 நபரும், செங்கல்பட்டு மாவட்டத்தில் 2 பேரும், இராணிப்பேட்டை மாவட்டத்தில் 1 நபரும், தென்காசி மாவட்டத்தில் 1 நபரும், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 7 பேரும், மயிலாடுதுறை மாவட்டத்தில் 1 நபரும் என மொத்தம் 35 மாவட்டங்களிலிருந்து 100 அறிஞர்கள் உதவித்தொகைக்கான அரசாணை பெறவுள்ளனர்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் அரசாணை வழங்கி விழாப் பேருரையும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. வே. ராஜாராமன், இ.ஆ.ப., அவர்கள் தொடக்கவுரையும், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ஔவை அருள் வரவேற்புரையும், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் திருமதி கு.ப. சத்தியபிரியா நன்றியுரையும் ஆற்றவுள்ளனர்.

தமிழ் வளர்ச்சி இயக்குநர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu